**ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டம் (IWWRMP) - 2022**

---

ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் (IWWRMP) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2021 ஏப்ரல் 22 ஆம் திகதிய 6621-எல்கே மற்றும் 6619-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களம், கிழக்கு மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நீர் வளங்கள் சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

மேல் மகாவலி நீர்நிலையை மீட்டெடுத்தல், நீர்வள முகாமைத்துவத்திற்கான நிறுவன திறனை வலுப்படுத்துதல் மற்றும் நீர் வள உட்கட்டமைப்பின் செயற்பாட்டை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அணைகளின் மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசனத்திற்கான மேம்பட்ட நீர் விநியோக வலையமைப்புக்களை செயற்பாட்டு ரீதியாக குறிக்கிறது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவம், அணை பாதுகாப்பு தொடர்பான உட்கட்டமைப்பு மேம்பாடுகள், தற்செயல் அவசர பதிலளிப்பு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய நான்கு கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது.

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,199.43 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75.03 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,158.55 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 69.53 மில்லியன் ஆசிய அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,040.88 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 மே 13 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | |
| ஐ.அ.டொலர் 49.2 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் 2021 - 2025 காலப்பகுதியில் 44 முக்கிய பணிகளை அமுல்ப்படுத்துதல் | 2022 ஆம் ஆண்டில் 64 பொதிகளை வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது | 17 பொதிகள் | 64 இல் 47 பொதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நீர்த்தேக்க அணைகள், கால்வாய்கள் புனரமைப்பு, மேம்பாடுகள், உபகரணங்கள் மற்றும் தூக்கும் இயந்திரங்களை வழங்கி நிறுவுவதில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்**

பின்வரும் சூழ்நிலைகள் காரணமாக கணிசமான தாமதம் நிலவியது.

(i) நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 6 எண்ணிக்கையான ஒப்பந்தப் பொதிகளிற்கு மீண்டும் கேள்வி கோர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

(ii) இலங்கை மகாவலி அதிகாரசபையின் முக்கிய பணிகள் தொடர்பாக 8 எண்ணிக்கையான ஒப்பந்தப் பொதிகளை 2022 இல் வழங்கி அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) வட மாகாண சபை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 12 முக்கிய பணிகளில் 7 எண்ணிக்கையான ஒப்பந்தப் பொதிகள் மாத்திரமே வழங்கப்பட முடிந்தது, அதே வேளை ID-EPC இடமிருந்து 10 ஒப்பந்தப் பொதிகள் உலக வங்கியின் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாததால் வழங்கப்படவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வளவ பிரதான கால்வாயில் 02 இடங்களில் மேம்பாடுகளுக்காக மகாவலி அதிகாரசபையானது உள்ளூர் கம்பனியொன்றுக்கு ரூபா 536.17 மில்லியன் மற்றும் ரூபா 610.44 மில்லியன் (வரியுடன்) பெறுமதியான 02 ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. இந்த 02 ஒப்பந்தங்களும் 13 சதவீதம் மற்றும் 6.5 சதவீதம் என்ற மோசமான நிலையில் நிர்மாண முன்னேற்றம் காரணமாக, இந்த 02 ஒப்பந்தங்களும் 2023 ஏப்ரல் 28 இல் மகாவலி அதிகாரசபையால் இரத்து செய்யப்பட்டன. ரூபா 237.91 மில்லியன் தொகையான தொடர்புடைய முற்பண உத்தரவாதங்கள் மற்றும் செயலாற்றல் உத்தரவாதங்கள் உரிய வங்கிகளில் இருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும், பணியை நிறைவேற்றுவதற்கான நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஏப்ரல் 28 இல் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் தொடர்பான முற்பண உத்தரவாதம், செயலாற்றல் உத்தரவாதம் மற்றும் ESHS உத்தரவாதம் ஆகியவற்றை 2023 மே 22 அளவில் இழக்க நேரிடும். எனினும், நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களில் மீதமுள்ள பணிகளை மீளக் கேள்வி கோருவதன் மூலம் பூர்த்தி செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் மிகுதிப் பணிகளுக்கான பொறியியல் மதிப்பீடுகள் மீளக் கேள்வி கோருவதற்காக PMU இற்கு பெறப்பட்டுள்ளன. | (i) ஒப்பந்ததாரர் கறுப்பு பட்டியலில் இடப்பட வேண்டும்.<br>(ii) உலக வங்கி வழிகாட்டல்களின் பிரகாரம் புதிய ஒப்பந்ததாரர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். |
| (ஆ) | கொத்மலை மற்றும் ரன்தெனிகல அணைகளில் தானியங்கி புவிசார் அணை கண்காணிப்பு ஆய்வு முறைமையை நிறுவுவதற்கான ஒப்பந்தம் 2022 ஆகஸ்ட் 08 இல் மகாவலி அதிகாரசபையால் நெதர்லாந்தில் உள்ள கம்பனியொன்றிற்கு ரூபா 629.92 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,749,791 இற்கு வழங்கப்பட்டது. கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டு 11 மாதங்களுக்குப் பின்னர் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் பெறுமதியை ஐ.அ.டொலர் 2,484,969 வரை அதிகரிப்பதற்கும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கும் ஒப்பந்ததாரர் கோரியிருந்தார். ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தைத் தொடங்காமை மற்றும் செயலாற்றல் உத்தரவாதங்களை வழங்கத் தவறியமை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையில் ஈடுபடத் தவறியமை போன்ற விடயங்களின் அடிப்படையில் மகாவலி அதிகாரசபை 2023 பெப்ரவரி 24 இல் ஒப்பந்தத்தை இரத்து செய்திருந்தது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் 2023 மார்ச் 20 இல் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கும் கேள்விப் பிணையை இழக்கவும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.<br>எனினும் மேற்படி பணிகளை மீளக் கேள்வி கோருவதற்கு இணங்கப்பட்டது. | உலக வங்கியின் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு புதிய ஒப்பந்ததாரர் விரைவில் தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (இ) | கலாவெவ இடது கரை கால்வாய் | முன்னெப்போதும் இல்லாத | உலக வங்கியின் |

| | | | |
|---|---|---|---|
| | வாயில் கதவை திருத்தும் ஒப்பந்தம் 02 கூட்டு முயற்சி கம்பனிகளுக்கு ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு ரூபா 177 மில்லியன் பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. தொடர்புடைய ஒப்பந்தம் 2023 சனவரி 23 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிர்மாண முன்னேற்றம் 12 சதவீதமாக இருந்தபோதிலும், ஒப்பந்தம் 2023 யூலை 23 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | பொருளாதார நெருக்கடியின் போது உருக்கு (steel) விலைகள் உயர்ந்துவிட்டதால், விலைவாசி உயர்வை ஈடுகட்டுவதற்கு ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட விலை நிகழ்த்தக்கவைக்கான ஏற்பாடு போதுமானதாக இருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் டொலர் தட்டுப்பாடு காரணமாக கடுமையான உருக்குகள் மற்றும் கியர் பெட்டிகள் 2022 திசெம்பர் வரை நீடித்தன, இதன் விளைவாக நிர்மாணப் பணிகள் கணிசமாகக் குறைவடைந்தன. | அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 53 சதவீத நீர்நிலை முகாமைத்துவ திட்டமிடல் மற்றும் 41 சதவீத பல்துறை நீர்வளத் திட்டமிடல் என்பவற்றை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த முழு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் முறையே ஐ.அ.டொலர் 06 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 7.70 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ளன. 2008-2018 காலப்பகுதியின் போது உலக வங்கியின் நிதி வசதிகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட அணை பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் செயற்திட்டத்தின் கீழ் இந்த 02 நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | கூறு 1.1 இன் கீழ், மேல் மகாவலி நீர்நிலை முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசனை சேவையானது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் பெறுகைக் குழு மூலம் கொள்வனவு செய்யப்படுகிறது. பல்வேறு காரணங்களால், எதிர்பார்த்த முன்னேற்றத்தை எங்களால் அடைந்துகொள்ள முடியவில்லை. எனினும், இது 2023 யூலை 4 இல் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. அதே வேளை, மேல் மகாவலி நீர்நிலைகளில் எந்தவொரு ஆரம்ப ஆய்வுகள்/ பணிகள் எதுவும் செய்யப்படவில்லை. | (i) நீர்நிலை முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதில், பணிகளுக்கு தாக்கம் செலுத்தும் அனைத்து உண்மைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.<br><br>(ii) நிகழ்ச்சித்திட்டத்தை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 17.37 மில்லியன் மற்றும் ரூபா 16.81 மில்லியன் பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 13 ஏரிகள் மற்றும் கால்வாய் புனரமைப்பு ஒப்பந்தங்கள் தொடர்பில் சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டங்களை தயாரிப்பதற்காக கடந்த காலங்களில் நிதி பலவீனங்கள் மற்றும் நட்டங்களைக் | முன்மொழிவுகளின் மதிப்பீட்டின் போது CPCM ஆனது அசல் பொறியியல் மதிப்பீடு ரூபா 9,065,000 என்பதை குறித்துக்கொண்டிருந்தது. இதில் நீர்ப்பாசனப் பொறியியலாளர்/ நீர்வளப் பொறியியலாளர் | (i) நிதி ரீதியாக இலாபகரமான ஒப்பந்ததாரர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.<br><br>(ii) பொறியியல் மதிப்பீட்டை மீறியிருந்ததன் |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருந்த ஆலோசனை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதில் வட மாகாணத்தில் ரூபா 9.07 மில்லியனிற்கு மதிப்பிடப்பட்டு பின்னர் ரூபா 13.3 மில்லியனிற்கு திருத்தப்பட்ட ஒப்பந்தம் ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி முன்மொழிவுகளின் பிரகாரம் ரூபா 16.82 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்தன. 02 மாகாணங்களில் பதின்மூன்று வரைவு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதி அறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளீடுகளிற்கான ஏற்பாடு காணப்படாததுடன் விலை ஏற்றம் மற்றும் எரிபொருளின் தீவிரம் ஆகியவற்றுக்குக் கணக்கீடு செய்யவில்லை. எனவே, பொறியியல் மதிப்பீட்டை திருத்த CPCM பரிந்துரைத்துள்ளது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட மதிப்பீடு 2022 யூன் 8 இல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. திருத்தப்பட்ட பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில், ஒப்பந்த பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையின் போது எரிபொருள் பற்றாக்குறை மற்றும் சந்தை விலைகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக ரூபா 16,818,880 இற்கு இணங்கப்பட்டது. இறுதியில், கிழக்கு மாகாணத்தில் அணைகள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்காக சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் சமூக முகாமைத்துவ திட்டம் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூகத் திரையிடல் அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவை 2022 யூன் 20 இல் ரூபா 16,818,880 தொகைக்காக வழங்கப்பட்டது. | அடிப்படையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும், நட்டம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது உட்பட எதிர்பார்க்கப்படும் புதிய செயற்பாடுகளுக்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து ஐ.அ.டொலர் 25 மில்லியனை ஐந்தொகை திகதிக்கு பின்னரும் கணக்குகளை சமர்ப்பிக்கும் காலப்பகுதிக்குள் அமைச்சரவை தீர்மானித்தவாறு இரத்து செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையைத் தணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஐ.அ.டொலர் 10 மில்லியனிற்கு மேல் மீளப் பயன்படுத்துவதற்கு | நடப்பு உலக வங்கியின் செயற்திட்டங்களை மறுபரிசீலனை செய்தல் மற்றும் இரத்து செய்தல் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞானத்தை நிதி அமைச்சு அனுப்பியிருந்ததுடன் ஐ.அ.டொலர் 25 ஐ இரத்து செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில், ERD நிதி உடன்படிக்கையில் திருத்தம் | திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டு அதற்கேற்ப நிகழ்ச்சித்திட்டங்களை திருத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது செயற்திட்டத்தின் அபிவிருத்தி நோக்கங்களிற்கு அப்பால் செல்லாது. மேலும், தற்போது செயற்திட்டத்திற்காக விண்ணப்பித்த ஐ.அ.டொலர் 05 மில்லியன் தொகையான உள்ளூர் நிதிகளை இரத்து செய்து அதற்கு பதிலாக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த புதிய நிலைமை உள்ளிட்ட திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கை 2023 மே 18 வரையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | செய்ய கோரி உலக வங்கிக்கு கடிதங்களை அனுப்பியுள்ளது, தற்போது உலக வங்கி குறுகிய காலத்திற்குள் நிதி உடன்படிக்கையை திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. | |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் செயற்திட்ட முன்மொழிவுகளை தயாரிக்கும் போது பொல்கொல்ல மற்றும் உடவள நீர்த்தேக்க அணைகளை நிரந்தரமாக நிறுவுவதற்கு 02 கென்ட்ரி கிரேன்கள் (Gantry Cranes) தேவை என மகாவலி அதிகாரசபை தெரிவித்திருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 2.24 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆகஸ்ட் 24 இல் மகாவலி அதிகாரசபையால் வழங்கப்பட்ட கூறுவிலைகளின் பிரகாரம் 07 மாதங்களுக்குப் பின்னர் கொள்வனவு செய்வதற்கு கம்பனியொன்றிற்கு ரூபா 797.61 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. மகாவலி அதிகாரசபையானது குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுத்ததன் விளைவாக, வழங்கப்பட்ட கூறுவிலைகளில் இந்த 02 ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதுடன், ஒப்பந்ததாரர் இந்த 02 ஒப்பந்தங்களையும் ரூபா 1,248.37 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 1,134,485 பெறுமதியில் தற்போதைய ரூபாவின் மதிப்பிழப்பு காரணமாக அனைத்து கிரயங்களிலும் அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு மேற்கொள்வதற்கு இணங்கியிருந்தார். அதன் பிரகாரம் மகாவலி அதிகாரசபையானது இந்த 02 ஒப்பந்தங்களையும் மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருடன் முந்தைய விலையை விட அதிகமாக ரூபா 450.76 மில்லியனை செலுத்தி உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்தது. ஐ.அ.டொலர் 206,270 இற்குச் சமமான ரூபா 127.32 மில்லியன் தொகையும் வேரை ஆரம்பிப்பு முற்பணமாக செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | நிதி மதிப்பீட்டு அறிக்கை 2022 சனவரி 24 இல் TEC ஆல் DPC இற்கு சமர்ப்பிக்கப்பட்டது, பின்னர், 2022 பெப்ரவரி 3 இல் ஏனைய கேள்விதாரர்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக உலக வங்கியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் DPC ஆல் செயன்முறை நடாத்தப்பட்டது. இறுதியில் 2022 பெப்ரவரி 20 இல் பெறுகை செயல்முறையைத் தொடர்வதற்கு உலக வங்கியிடமிருந்து அனுமதி பெறப்பட்டது. அதன் பின்னர், DPC இன் அங்கீகாரத்தின் கீழ், M/S இன்டோ ஈஸ்ற் எஞ்சினியரிங் அன்ட் கென்ஸ்ட்ரக்ஸன் (லங்கா) பிறைவேட் லிமிட்டட்டிற்கு 2022 ஏப்ரல் 8 இல் DG, MASL ஆல் இரண்டு ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டது. 2021 யூலை 4 இல் கேள்விகள் கோரப்பட்டு, முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியின் மத்தியில் 2022 ஏப்ரல் 8 இல் வழங்கப்பட்டதால், கென்ட்ரி கிரேன்களின் இறக்குமதி ஒப்பந்தங்களில் விலை நிகழத்தக்கவைகள் மற்றும் பலதரப்பட்ட நாணயங்களைச் சேர்க்காமல் LOA ஐ | கூறுவிலைகள் கோரப்பட்ட பின்னர் குறுகிய காலப்பகுதியினுள் ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும். |

மகாவலி அதிகாரசபையின் நீர்த்தேக்க அணைகளில் ஏற்கனவே உள்ள கதவுகளை திருத்தும் பணியின் போது, அதிகாரசபையின் தலைமைப் பணிகள் பிரிவில் உள்ள நடமாடும் கிரேன்கள் கதவுகளை உயர்த்துவதற்கு நாளதுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒப்புக்கொள்ள ஒப்பந்ததாரர் மறுத்துவிட்டார். இரண்டு ஒப்பந்தங்களும் தேசிய அளவிலான அணை செயற்பாடுகளில் மிகவும் முக்கியமானவை என்பதால், 2022 ஆகஸ்ட் 10 இல் PAC மற்றும் பல நாணயங்களைச் சேர்த்து ஒப்பந்தத்தை திருத்தம் செய்வதற்கு "ஆட்சேபனை இல்லை" என அரச நிதித் திணைக்களம் வழங்கியதுது. அதைத் தொடர்ந்து, 2022 ஆகஸ்ட் 17 இல் உலக வங்கிக்கு மீள்கேள்வி கோருவதை விட ஒப்பந்தத்தை திருத்துவதற்கு கோரி MOI செயலாளர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, தேசிய தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு ஒப்பந்தத்தை திருத்தம் செய்வதற்கு உலக வங்கி அனுமதித்துள்ளது. WB அறிவுறுத்தலின் பிரகாரம் PAC ஆனது LKR கூறில் சேர்க்கப்பட்டுள்ளது, இது விலை உயர்வு தொடர்பான செலுத்தலிற்கு உட்படுகிறது. அதேவேளை கென்ட்ரி கிரேன்களின் இறக்குமதி ஐ.அ.டொலரில் வழங்கப்பட்டுள்ளது, இதில் விலை நிகழத்தக்கவை அனுமதிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் 2022 நவம்பர் 15 இல் ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டது.

(ஏ) எனவே, மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிகளுக்குச் சொந்தமான அரவத்த குளத்தை மேம்படுத்துவதற்கான ரூபா 46.03 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தின் முன்னேற்றம் 20 சதவீதமாக இருந்தது. ஒப்பந்தம் 2023 யூன் 21 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று, 2022

அங்கு குள அணைக்கட்டை பலப்படுத்தி, கீழ்நிலை சரிவில் டோ பில்டரை (toe filter) நிர்மாணிக்கும் போது, மேல்நிலை சரிவில் ரிப் ரப்பை (Rip Rap) வைப்பதன் மூலம் குள அணைக்கட்டை புனரமைப்பதற்கு

ஒப்பந்தங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வட மாகாண சபைக்கு சொந்தமான முதியன்கட்டு கால்வாயின் வலது கரையை புனரமைப்பதற்காக ரூபா 397.31 மில்லியன் பெறுமதியான 03 ஒப்பந்தங்களின் முன்னேற்றம் 30% - 50% இற்கு இடையில் இருந்ததால் ஒப்பந்தம் 2023 யூன் வரை நீடிக்கப்பட்டது. ரூபா 81.33 மில்லியன் பெறுமதியான அந்த மாகாண சபைக்கு சொந்தமான 02 ஒப்பந்தங்களின் நிர்மாண முன்னேற்றம் 15% மற்றும் 40% என்ற மட்டத்தில் இருந்ததால், அதன் காலப்பகுதியும் 2023 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

திட்டமிடப்பட்ட இந்த ஒப்பந்தம் 2021 திசெம்பர் 23 இல் தொடங்கப்பட்டது, நிர்மாண காலத்தின் பெரும்பகுதியில் குளம் முழு விநியோக மட்டத்தில் அல்லது கணிசமான அளவில் இருந்தது, ஏனெனில் பயிர்செய்கைக்கு நீர் வழங்குவதற்கு ID கடமைப்பட்டிருக்கிறது, அதேசமயம் CEB ஆல் மின்கம்பத்தை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டதால் கீழ்நிலை சரிவில் டோ பில்டரை மேற்கொள்ள முடியவில்லை. எனவே, எதிர்பாராத தாமதம் காரணமாக ID நிர்மாண காலப்பகுதியை நீடிக்க வேண்டியிருந்தது. எனினும், மின்கம்பம் அகற்றப்பட்டு, தற்போதைய பௌதீக முன்னேற்றம் 75% ஆக உள்ளது. இதுதவிர, முத்தையன்கட்டு கீழக்கரை சீரமைப்புப் பணியின் கீழ் 3 ஒப்பந்தங்களும், பிரிமந்தலாறு திட்டம் மற்றும் கனகாம்பிகை திட்டத்தின் மறுசீரமைப்புக்காக 2 ஒப்பந்தங்களும் 2021 திசெம்பரில் 365 நாட்கள் நிர்மாணக் காலத்துடன் வழங்கப்பட்டன.

எனினும், பொருட்களின் நிர்மாணத்தின் முன்னெப்போதும் இல்லாத விலை உயர்வு காரணமாக அனைத்து ஒப்பந்தங்களின் அனுமதிக்கப்பட்ட விலை நிகழத்தக்கவைகள் தீர்ந்துவிட்டதுடன் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக பொதிகளின் பௌதீக முன்னேற்றம் மெதுவாக இருந்தது. உலக வங்கியின் இணக்கப்பாடு மற்றும் செயலாளரின் அங்கீகாரத்தை தொடர்ந்து, 2023 மார்ச் 27 இல்

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தத் திருத்தத்தின் மூலம் MOI விலை நிகழத்தக்கவை அதிகரிக்கப்பட்டது. தற்போது குறிப்பிடப்பட்ட பொதிகளின் பௌதீக முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் உள்ளது. | |

## 2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 27.2 மில்லியன் தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் 2022 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாத சலுகை வட்டிக் கடனில் பயன்படுத்தப்படாத 81.73 சதவீதத்திற்காக சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது. | சலுகைக் கடனின் கீழ் கடன் மீதியை மீளப்பெறுதல் மீதான வட்டிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருந்தது, ஒரு மாற்றுக் காரணி விகிதம் மற்றும் வேறுபடும் பரவல் அல்லது சலுகை அல்லாத கடனின் கீழ் பொருந்தக்கூடிய விகிதத்தைக் குறிக்கிறது. எனினும், நிதி உடன்படிக்கையின் பிரகாரம் முன் இறுதிக் கட்டணம் மற்றும் முன் தயாரிப்பு வசதி கொடுப்பனவுகள் - மொத்த ஐ.அ.டொலர் 392,385 (66,750+325,635) சலுகையற்ற கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ரூபா 27.2 மில்லியன் வட்டி கட்டணம் இந்த சலுகையற்ற ரூபா 78,647,303 (ஐ.அ.டொலர் 392,385) தொகை ERD நிதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சலுகைக் கடன் சேமிப்புகளை (81.73%) பயன்படுத்துவதற்கு வழியெதுவும் காணப்படவில்லை. | நிதிக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட அணை பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட செயற்திட்ட அலுவலகத்திற்கு பயன்படுத்தப்பட்ட அலுவலக உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய IWWRM செயற்திட்டத்திற்கு முறையாக மாற்றப்பட்டிருக்காத முன்னாள் DSWRP செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக முறைப்படுத்தப்பட வேண்டும். அதன் பிரகாரம் குறித்த சொத்துக்களின் மதிப்பீடு மற்றும் மெய்மையாய்வை நடாத்துவதற்காக 4 உறுப்பினர் கொண்ட குழுவை 2023 பெப்ரவரி 17 இல் நீர்ப்பாசன செயலாளர் நியமித்துள்ளார். | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |